அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :143/2016
தேதி. :12/09/2016

# சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அவர்களின் பக்ரீத் வாழ்த்து

*தியாகத் திருநாள் என்று போற்றப்படும் பக்ரீத் திருநாள் உலகெங்கும் உள்ள இஸ்லாமியர்களால் கொண்டாடப்படும் புனித பண்டிகையாகும். இத்தியாகத் திருநாளில் உலகெங்கும் அமைதியும், மகிழ்ச்சியும், நிம்மதியும் நிரந்தரமாக மனித இனத்திற்கு கிடைக்க வேண்டும் என்கின்ற பிரார்த்தனையை, உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு பிரார்த்திப்போம்.*

*“வறியார்க் கொன்றீவதே ஈகை” என்ற குறள் நெறியை தங்கள் வாழ்வின் நெறியாகக் கொண்டு இறைதூதரின் தியாகங்களை நினைத்துப் போற்றும் இனிய திருநாள் பக்ரீத் நன்னாள். உருவங்களையோ செல்வங்களையோ காணாமல் உள்ளங்களையும், செயல்களையும் மட்டுமே இறைவன் காண்கிறான். எனவே உள்ளத் தூய்மையுடன் கூடிய நம்பிக்கையின் மூலமே இறை அருளை பெற முடியும் என்கிற நபிகள் நாயகத்தின் போதனையை நினைவில் கொண்டு உலகில் சமாதானம் நிலைத்து, மக்கள் யாவரும் ஒற்றுமையுடன் திகழ சாதி, மத, இன, மொழி, பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை படைக்கவிருக்கும் அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் என் மனதார்ந்த தியாகத் திருநாள் நல்வாழ்த்துகளை என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்** B.Sc
**நிறுவனத் தலைவர்**